[illegible]

O—, 11MLA6,N
N32
170604.

461

உ

குருநாதன் துணை.



21 JAN 1932

ஸ்ரீ பராசத்தி நவநாத சுவாமிகள் மடாலயப் புகழ்

# ஸ்ரீ நவநாத மணிக்கோவை.

யானைமலை ஸ்ரீ நவநாதசுவாமிகள் திருப்திக்கிணங்கி
மதுரை தாலூகா வெளவாத்தோட்டம் கிராமம்
தமிழ் ஸ்கூல் உபாத்தியாயர்
R. லெக்ஷ்மணப் பிள்ளை அவர்களால்
இயற்றப் பெற்று

தேவகோட்டை M. சுப்பய்யா சேர்வை அவர்கள்
பொருளுதவியால்
...வகோட்டை
... அச்சுக்கூடத்தில்
...ப்பெற்றது.
...1932.

O-, 11MLA6, N
N32
120664

உ

குருநாதன் துணை.

# ஸ்ரீ நவநாத மணிக்கோவை.

## கணபதி துதி.

### வெண்பா.

நாதவெளி யானந்த நன்னொளியை நத்துநவ
நாதமணிக் கோவைதனை யான்பாட—நாதநவ
மொன்பதின் பதரசத்தை யுண்டவுமைபெற்ற வொற்றைக்
கொம்பனின் னடியருளைக் கொடு.

## அவையடக்கம்.

திருமருவு நவநாத மணிக்கோவை தன்னையறு
சீரடி விருத்தமாகத்
திசைநான்கும் புகழ்பெறப் புகன்ற னம்புன்மொழித்
திகழ்பதஞ் சிறந்துசூழத்
தருமருவு மறைநாத னடிக்கமல மறவாத
சன்மார்க்க சற்பாத்திரந்
தவமுமெய் வேதகுல மாணிக்கத் தேவாரந்
தருவாசஞ் செறிந்த
மருமருவு வாதவூர் தனில்ஜெனன மகிபனு
மாகங்கைகுல திலகனு
மதிவிவேகத்துருவா யதிராம னெனுஞ் க்ஷேம
மாராத் தவத்துதித்த
வுருமருவு லெச்சுமண தாசனு மிலக்கண
வுண்மை யறியாதபால
னேதுமிதி லெக்குற்ற மிருப்பினுந் தமிழறிஞ
ருவந்துபொருத் தாளுவீரே.

170604

## பராசக்திதுதி.

### நூற்பயன்.

1. சத்திய பிரமியே யுத்தமிகு ணகரி
சங்கரி கௌமாரி வீரி
சுரூப பதவி சஞ்சீவியே முத்தர்தொழுஞ்
சாம்பவி கருணா கரி
வெத்திநெறித் தத்வ முறைநித்திய மகலாத
விமல னகமகிழும் பாரி
மிருவதன சிங்காரி மகிட னுடலைக் கீறி
வெஞ்சின முடித்த சூரி
சித்தசன் மாமியே பலைமக ளருந்தவ
திருநீலி சூலி மாரி
திகழ்பவள கனகமணிப் புகழ்பரவு தாவடஞ்
செறிந் திலங்கிடு முதாரி
நத்து முலகத்தி லுயர்பெற்று வளரத்திமலை
நட்புற் றெழுந் தருளிய
நாரணி பூரணிவெண் ணீரணிக் காரணி
நவிலு நவநாத மணியே.

2. அட்டாங்க யோகமே கன்மயாகஞ் சுருதி
யானதபோ யாக மணியே
அன்பிலுறு ஜெபயாக தியானயாக ஞான
யாக மைந்தான மணியே
அட்டாங்க நெறிதவழுந் பொறியைந் தடக்கியே
யைம்புல னொடுக்கு மணியே
அதிநிதியம் பல்லாண்டு விதித்த மெய்க்கருவி
யாராய்ந்த சுகுண மணியே

பட்டாங்கி லுள்ளபடி செப்மையு மிம்மையும்
பகர்வறுமை மூன்றின் மணியே
பதமறிந்திடு வலிமை பெற்றிலங்கிய மதூரம்
பரவிடுங் கருணை மணியே.
பட்டாங்கி லுள்ளபடி யெட்டுத்திக் கெங்கினும்
பரஸ் பரஜோதி மணியே
பரவானை மலைமீதெழுந் தருளிய சத்தி
பாலநவ நாத மணியே.

3. விண்டுராதித் தேவ முனிவர்களுஞ் சித்தர்களுஞ்
மிக்கமன மகிழு மணியே
விரதகுண நிஷ்டை புரிவாதப் ரதிஷ்டைவே
தாந்த சித்தாந்த மணியே
தொண்டு செய்யடியார்க் கடியார யெஞ்ஞான்றுந்
துகளிலா ஞான மணியே
சூக்ஷ்மச் சந்யாசி சுளிமுனைப் பரதேசி
சுத்தசை தன்ய மணியே
கண்டுனைத் துதிப்போர்க் கிரங்கிகல் லருள்தந்து
கலி நிவர்த்திக்கு மணியே
கமண்டலக் கருணைபொழியத் யந்த ப்ரீதியே
காசினியி லுற்ற மணியே
பண்டுவினை தொந்தமற வென்றுனை நம்பினேன்
பக்ஷம் வைத்தாளு மணியே
பரவானை மலைமீ தெழுந்தருளிய சத்தி
பால நவநாத மணியே.

4. சுருதிமுறை கருதிமறை திருவுருவ முறுகாரண
சுகுண ப்ரசித்த மணியே

சூதக வயற்றுவலி காதூரல் ஜயரோகஞ்
சூலேநோய் தீர்க்கு மணியே
பெருவியாதி குஷ்ட்டங் கபவாத பித்தமொடு
புத்துநோய் தீர்க்கு மணியே
பிரிநீ ரழிவினொடு வெட்டைவெள் ளரையாப்பும்
பிணிதனைத் தீர்க்கு மணியே
கருவிலிருந் துற்றிடு மேகரோகங் குன்மங்
கடிவிஷந் தீர்க்கு மணியே
கண்டமாலை ராஜபிளவையொடு கண்ணி னோய்
கட்டியுந் தீர்க்கு மணியே
பருதிதனைக் கண்டபனி விலகிடும் போலநற்
பஞ்சா க்ஷரத்தின் மணியே
பரவாணை மலைமீதெழுந் தருளிய சத்தி
பால நவநாத மணியே.

5. வஞ்சனைபில்லி சூன்யம் வைத்துப் புதைத்திட்ட
மாராட்டந் தீர்க்கு மணியே
வாந்திவிரி சூலைக் காமாலையொடு மலையாள
வன்மந் தவிர்க்கு மணியே
அஞ்சாத மோடியிட் டிருந்து வாய்பேசா
தடுத்ததைத் தீர்க்கு மணியே
அறியாது மனமிரண் டலறிப் புலம்பிடு
மகந்தையைத் தீர்க்கு மணியே
வெஞ்சினங் கொண்டு வெறிபித்துப் பிடித்திட்ட
வெகுளியைத் தீர்க்கு மணியே
மீளாதபேய் பிடித்தாலு மதைத் தண்டித்து
விபத்தினை தீர்க்கு மணியே

பஞ்சௌனப் பறந்திடுஞ் சகலவித நோய்களின்
பஞ்சாட்ச ரத்தின் மணியே
பரவானை மலைமீதெழுந் தருளிய சத்தி
பால நவநாத மணியே.

6. மண்டலத் துற்றவர்கள் கண்கண்ட நோய்தீர்த்து
மாகீர்த்தி பெற்ற மணியே
மன்னிமை யாகவே யெண்ணிக் கணக்கில்லா
மாந்தர் துயர்தீர்க்கு மணியே
விண்டலத்த வருமுன் மகிமை கண்டானந்த
மிகுமலர் சொரியு மணியே
விரிதான வாகம மிருசதத்தோ ரெட்டின்
விதியுணர்ந் திட்ட மணியே
கண்ட யோகஞ் சகடயோக மற்றெல்லாங்
கருதி யுருவான மணியே
காயாசித்தி யோக மாயா சித்தியான
காருண்ய ஜீவ மணியே
பண்டுநூ லகத்தியம் நூல்வல்ல சித்தமுனி
பரிந்து கொண்டாடு மணியே
பாவானை மலைமீதெழுந் தருளிய சத்தி
பால நவநாத மணியே.

7. எக்காலு முன்பாத மறவாத யேழையென்
னிடுக்கந் தவிர்த்த மணியே
யிப்புவி தன்னிலே கற்பமொன்றினி லுள்ள
தெல்லாந் தெரிந்த மணியே
முக்காலங்களு முணர்ந் தீரேழு புவனத்து
முண்மை யறிவான மணியே

முத்தர்க ளிருதயம் நத்திடு மானந்த
முச்சுட ரான மணியே
நக்கரவஞ் சூடுமுக் கண்ணெனுஞ் சச்சிதா
னந்த ப்ரசித்த மணியே
ரமணபிர் மானந்த வத்வீகமே லேவ
ரகசியங் காணு மணியே
பக்குவக் கனிபல விருக்ஷங்க ளெங்கினும்
பரவிடுஞ் சோலை மணியே
பரவானை மலைமீதெழுந் தருளிய சத்தி
பால நவநாத மணியே.

8. கஞ்சமலர் வாவியு மஞ்சுதவழ் சோலையுங்
கனிரசம் பெருகு மணியே
கற்பூர சோடச நைவேத்ய மம்பிகைக்
கர்ச்சித்த பூசை மணியே
விஞ்சை மந்திரதூப நேபமுங்க கனமுனி
விக்ஞாப னத்து மணியே
வித்துவப் பாவலர் நாற்கவி வல்லவர்
மேவித் துதிக்கு மணியே
அஞ்சலித் துனைநாளுங் கெஞ்சிடு மேழையர்க்
கருளமுத மூட்டு மணியே
யாதாரமே யுனது பாதாரந் தந்தெனை
யாண்டு ரட்சிக்கு மணியே
பஞ்சவிப் பிறவிக் கடலைக் கடத்திடும்
பான்மை யறிவிக்கு மணியே
பரவானை மலைமீதெழுந் தருளிய சத்தி
பால நவநாத மணியே.

9. சிற்றறிவின லடியே னற்றமிழ்ப் பாடினேன்
  சித்தம் வைத்தாளு மணியே
சிவமுத்திபெற ரத்துந்தவ பக்தியனுதினஞ்
  சீர்த்தி தந்தாளு மணியே
கற்றறிவிலாத வொரு பிள்ளையைப் பெற்றதாய்
  கருதுவது போலு மணியே
கசடனு னாகிலு மெமக்குற்றஞ் செய்யினுங்
  காத்து ரட்சிக்கு மணியே
நற்றறிவு நற்செய்கை நற்றவர்க ணேசமும்
  நாயேனுக் கருளு மணியே
நாதவே தாந்தமெய் ஞானப்ர சித்தாந்த
  நாதவடி வான மணியே
பற்றறிவி னெனக் குற்றபழ வினைபந்த
  பாசந் தவிர்க்கு மணியே
பாவானை மலைமீதெழுந் தருளிய சத்தி
  பால நவநாத மணியே.

நவநாதமணிக் கோவை செய்யுள் ஒன்பதும்
முற்றுப் பெற்றது.

சுவாமிகள் திருவடிகளே சரணம்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

உ

## சத்திமயம்.

### வெண்பா.

கத்துகடல் சூழுலகில் கண்டுவந்தே னோர்புதுமை
அத்திமலையத் தெழுபித் தானந்தஞ்—சத்தி
தவமேவு நெறியார்ந்த சாத்விக மெய்மை
நவநாத சாமிதனை நான்.

நெஞ்சே சஞ்சாரம் நிலையா என்றமெட்டு.

பல்லவி.

கண்டே னென் கலிதீரவே—நிதங்
கருதி மெய்யாரவே (க)

அநுபல்லவி.

(1) அண்டர் முனிவர் புகழற்புத ஞானி
ஆதிமோன ப்ரசித்தி யானந்த மேனி
மண்டலந் தனிற் றவயோக பிமானி
மயநெறி மறையுறை மகத்துவம் பேணிக் (க)

(2) வேலைசூ ழவனியோர் மிக்கவே கூடி
வேண்டி டவவர்வினை தீர்த்திட நாடி
வாலையி னருட்பூசை தந்துடன் தேடி
வணங்கிய பிரபந்த மார்க்கமே யோடிக் (க)

(3) இருநான் கென்பது மியல்வதோ ரெட்டு
யிரண்டது கூடிய தசமெனுங் கட்டு
உருமயமே யட்ட காசமே தொட்டு
ஓங்கிய நவநாத பாதங்கும் பிட்டுக் (க)

(4) சுத்தசை தன்யபர சூட்சம நேசி
சுயவமிர்தம் பெருகுஞ் சுனிமுனை வாசி
தத்துவ ஞான சாத்மீகசங் யாசி
தன்னைமே லெட்சுமணன் றமிழ்நிதம் பேசிக் (க)

---

மகாதலமு மதோதேரியுது என்ற மெட்டு.

பல்லவி.

மகானிருப்பிட மதோ தெரியுது—பிரள
யுகாந்தகால காலாங் கிகழானை மயில் (மகா)

அநுபல்லவிதொடர்.

மகத்வநித மெத்தனை சதுர்
யுக்தவமத சித்தரும் புகழ் (மகா)

மடங்கள் தெறிந்தடர்ந்த புனற்
றடங்கணிறை யிடந்தனிலே (மகா)

மண்டலத்தவர் துதிக்கும்
விண்டலத்தவர் மதிக்கும்
மவுனுதிய ராசி கோஷ்ட்ட
நவநாத மெய்ப்பூசை சிரேஷ்ட்ட (மகா)

மன்புங் கொண் டின்பங்கண்
டன்புங் தொண் டும்பரவிடு
மானிலத்தி ஞானிகட்கு
மோன வித்தை யானதத்வ (மகா)

சரணம்.

சுகாதாரத்தின் சூட்சம தேகி
சுத்தசைதன்ய ப்ரசித்த விவேகி
யகார வுகாரணதவ யோகி
அன்பின் பொன்டி தொழவரு நண்பன் லெட்மணன்
[றமிழுறு (மகா)

---

முருகன் றிருமால் மருகன் பெருமை என்ற மெட்டு.

இராகம் அடாணு தாளம் ரூபகம்.

பல்லவி.

தவயோக மெய்ஞானி பெருந்துறவி ஆதி
தற்பர னற்புத
விற்பன சிற்பரத் (தவ)

அநுபல்லவி.

நவநாதரம் சுவாமி தரிசனம்
நதிசுற்றிய கதிபெற்றிடும்
விதிபற்றிய மதிசற்குணத் (தவ)

சரணங்கள்.

(1) பவமெனுங் கடலை நீந்திப் பிரபஞ்ச
பந்த மூவாசை நீக்கி—ஐந்து
பாடகர் வாழ்ந்திடும் நாலொரு வீடுக
பாடநவம் நோக்கி
சிவமெனு முருவைத் தேடித் திடங்கொண்டு
தேசோ மயாணந்தத் தேயமுதமுண்டு
புவனபுரந்தரி பொற்பதத்தே தொண்டு

புரி தத்துவ
துரி தத்துடன்
பரி சுத்தநன்
நெறி நத்திய (தவ)

(2) சாமநேம கான சன்மார்க்கமே த்யாக
சந்யாசியத் வீகம் நாம
சரிகை கிரிகை யோக ஞானநேர்மை
தவமும் நற்சாத் வீகம்
காமக்ரோத லோபமோக மதைப்போக்கி
காணும் நரைதிரை தீர்த்தருளைத் தேக்கி
தீமனப் பேயைத் தடிகொண்டு தாக்கி
ஜெப மங்கள
சுப மெங்கினும்
பர விங்கிதந்
தரு சம்பரம (தவ)

(3) பத்தியுட னுகந்தித் தவத்தோர்களும்
பக்ஷமுடன் கூடி—வந்து
பாக்கிய சிலாக்ய மாரோக்கியம் பெறதினம்
பாவுலக்ஷங் கோடி
சித்தியுடன் சேவை தரும் பூசை
செய்து சடாக்ஷர மேவுந்திரு வோசை
வித்துவ லெட்சுமணன் பாடுந் தமிழிசை
விந்தப் புகழ் சந்தப்பிர
பந்தத் தரு ளந்தத்திகழ் (தவ)

முற்றிற்று.

உ

சிவமயம்.

# தேவகோட்டை
## மு. காசியா பிள்ளை பாடியது.

---

திருப்புகழ்.

நவனுதயோக தவாசமோன
  நவமாய் நவமணியாய் யமர்ந்த   சர்குருனுதா
நலமானவேதப் புகழானஞான
  நாடியே யானை மலையமர்   நேயா
கவிவல்லோற் போற்றும்
  கலைஞானம்பெற்ற கருணைப்பிரகாசக் குருநாதா
ஜெகத்தாய் மகிழ் மகத்தான தேவ
  ஜகத்தன்பர் துதிக்கும் சுவாமி நவனுதப்
                    [பெருமாளே.

07 11 MLDG, N
P52
தமிழ்நாடு அரசு ... நூலகம் 600 008.
170664

4A
2-40